# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

# Layout Application - Final Approval Letter

Roc No: NKL/ G739IAJ0 /24327/2024/TCP

Date: 12/19/24 10:15 PM

From:

Village Panchayat

Marukkalampatti

To :

MR.S.SURESH,
DOOR NO: 278/A KKP STREET,
TIRUVALLURVAR COLONY,
NAMAKKAL,
NAMAKKAL- 637001.

Online Application Number: G739IAJ0

Sir/ Madam,

Sub :

FINAL LAYOUT APPROVAL LETTER

Ref :

3/225986/2024-2025

Body:

The Proposed Layout with extent of 1.285 Acre (or) 5200.21 Sq.m ( or) 17 Plots in SF.No:72/1A3D in Puthur East village, Marukkalampatti Panchayat, Elatchipalayam Union, Tiruchengode Taluk, Namakkal District.

Signature valid

*Signed by: Village Panchayat President*
*Location:Namakkal*
*Date:2024.12.19 22:15:36*

Village

## நாமக்கல் வட்டாரம் அணியார் ஊராட்சி மன்ற தலைவரின் நடவடிக்கைகள்
## முன்னிலை: திருமதி.S.கண்ணகி,

ந.எண் 01/2020 /ஊராட்சி நிர்வாகம் நாள். 12.2024

பொருள்- மனைப்பிரிவு அங்காரம் நாமக்கல் வட்டாரம் அணியார் ஊராட்சி / கிராமம் சர்வே எண்.58/1A-இல் 1.13 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டது- இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் - தொடர்பாக

பார்வை
1. அரசாணை(நிலை) எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ4(3)-த் துறை, நாள்.04.05.2017.
2. அரசாணை(நிலை) எண்.112, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ.4(3)-த் துறை, நாள். 22.06.2017
3. அரசாணை(நிலை) எண்,138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (4.4(2), 04.06.2004
4. அரசாணை(நிலை) எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019
5. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் NKL/G739IAJ0/24327/2024/TCP
6. தானபத்திர ஆவண எண்.1444/2024, நாள்.16.05.2024
7. தனியாரால் வழங்கப்பட்ட ரூ.100/-க்கான உறுதிமொழி பத்திரம்.
8. நகர் ஊரமைப்புத் துறைக்கு உரிய கட்டணம் (3% Market Value) செலுத்தப்பட்ட சலான் எண். 2024-2025/8/7/1/7/66, நாள் 19.12.2024

ஊராட்சி மன்ற அலுவலகம் நாமக்கல் மாவட்டம். அணியார் ஊராட்சி

உத்திரவு

பார்வை 1 (ம) 2-இல் காணும் அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டாரம் அணியார் ஊராட்சி / கிராமம் சர்வே எண்: 58/1A-இல் 1.13 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முறைப்படுத்தப்பட்டு, உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் உத்தரவின்படி, மனைப்பிரிவிற்கு NKL/G739IAJ0/24327/2024/TCP வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி, மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் ஊராட்சிக்கு பார்வை 6-இல் காணும் தானபத்திரம் மூலம் வேலகவுண்டம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் அணியார் ஊராட்சி மன்ற தலைவர் என்ற பெயரில் தானமாக பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது. மேலும், அணியார் ஊராட்சி மன்றத் தீர்மானம் எண்.16 நாள் 23.11.2024-ன் படி, மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் ஊராட்சிக்கு தானபத்திரம் முலம் பெற்றுக்கொள்ளப்பட்டதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி, சாலைகளை பொதுச்சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கும் சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கும், உட்பிரிவு கட்டணத்தொகையினை செலுத்த மனுதாரரால் பார்வை 7-இல் கண்டுள்ளவாறு ரூ.100/- க்கான ஒப்புதல் பத்திரம் கையொப்பமிட்டு பெறப்பட்டுள்ளது. எனவே பார்வை 5-இல் காணும் உத்திரவில் தெரிவித்துள்ளவாறு, அணியார் ஊராட்சியில் மனைப்பிரிவு அனுமதி வரைபட கட்டணமாக 1 மனைகளுக்கு ரூ.1000/- வீதம் 15 மனைகளுக்கு ரூ.15000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்), மேலும் பார்வை B-ன் படி, மனை உட்பிரிவிற்கு 3% மார்கெட் Value கட்டணம், ரூ.6,780/- (ரூபாய் ஆறாயிரத்து ஏழு நூற்று எண்பது மட்டும்), ஆக மொத்தம் ரூ.21,780 ஊராட்சி பொது நிதியில் செலுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | மனைப்பிரிவின் மொத்த பரப்பு | வழிகாட்டுதல் மதிப்பு (ஏக்கரில்) | மொத்த மதிப்பு | 3 % மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 4572.95 ச.மீ | ரூ.49.42/- ச.மீ | 2,26,001/- | 6,780/- |
| | 0217- Urban Development 60- Other Urban Development Schemes 800- Other Receipts-AS- Receipts Under Land use Conversion Charges 27 Non. Taxation Fees -09 Collections. (DPC-0217- 60-800-AS-22709) | | | |

எனவே, உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதி NKL/G739IAJ0/24327/2024/TCP -இல் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேற்காணும், நிபந்தனைகளை மீறினால் மனைப்பிரிவு அங்கீகாரம் இரத்து செய்திடவும் அதிகாரம் உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு - மனைப்பிரிவு நிபந்தனைகள்

S.கண்ணன்

தலைவர்

ஊராட்சி மன்ற தலைவர்
அணியார் ஊராட்சி
நாமக்கல் வட்டம்.

பெறுதல்
திரு.S.சுரேஷ்,
க.எண்.278/A. KKP வீதி,
திருவள்ளுவர் காலனி,
நாமக்கல்
நாமக்கல் மாவட்டம்-637001.

நகல்.

1 உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல்.
(அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது)
2. சார்பதிவாளர், வேலகவுண்டம்பட்டி அலுவலகம், நாமக்கல் மாவட்டம்.
3. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), நாமக்கல்.
4. வட்டார வளர்ச்சி அலுவலர், நாமக்கல் வட்டாரம்.
(தகவலுக்காக)

<u>**மனைப்பிரிவு நிபந்தனைகள்**</u>

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ./நாமா எண். 53/2020 என எண்ணிட்டப்பட்டு வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சம்மந்தப்பட்ட மாநகராட்சி சட்ட விதிகள், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 175,179 மற்றும் 3008பிரிவு தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதிகள் 1997, விதி 3(1) மற்றும் அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.16.06.2003 இன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கேற்ப சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரரால், நிர்வாக அதிகாரியால் (Executive Authority) நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் மனுதாரரால் அமைக்கப்பட வேண்டும்.
2. அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி, தெரு விளக்கு ஆகிய வசதிகள் மனைப்பிரிவுதாரர்களால் ஊராட்சிகளின் கருத்திற்கொப்ப மனுதாரர் அமைத்துத்தர வேண்டும்.
3. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறை, மற்றும் ஊராட்சியின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்ட இம்மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர்/உரிமையாளர் முறையாக அமைக்கப்பட்டு உள்ளாட்சி நிர்வாக அதிகாரியால் உரிய படிவத்தில் பதிவு செய்து பொதுச் சாலையாக பராமரிக்க தனி அலுவலருக்கு தானமாக ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும்.
5. மேற்படி சாலைகளை பொதுச் சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு தொகையையும் உள்ளாட்சி நிர்வாக அதிகாரிக்குச் செலுத்துதல் வேண்டும். இதை நடைமுறைப்படுத்த மனுதாரரிடமிருந்து சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கான உட்பிரிவு கட்டணத் தொகையைப் பெறும் வகையில் பத்திரத்தில் மனுதாரரின் கையொப்பம் பெற வேண்டும்.
6. ஒரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
7. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஓர் மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.
8. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது.
9. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு - வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7 மீட்டர் (23 அடி) அகல சாலைக்கு 1.5 மீட்டரும் (5 அடியும்) 9 மீட்டர் (30 அடி) அகலம் மற்றும் 12 மீட்டருக்கு (40 அடிக்கு) அகலம் வரையிலான சாலைகளுக்கு 3 மீட்டரும் (10 அடியும்), 18 மீட்டர் (60 அடி) சாலைக்கு 4.5 மீட்டரும் (15 அடியும்), 24 மீட்டர் (80 அடி) அகலமும் மற்றும் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6 மீட்டர் (20 அடி) என்ற அளவில் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். ஊராட்சி கட்டிட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிற்கும் உட்பட்ட நிலப் பகுதியில் தெருவின் உயர்மட்டத்திலிருந்து 1.8 மீட்டர் (6 அடி) மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகளின்படி 2.4 மீட்டர் (8 அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்தவித கட்டிடமோ, சுவரோ கட்டுதல் கூடாது.
10. மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் திறந்தவெளி விடப்பட வேண்டும். 10 மீட்டர் வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத் திறந்தவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்பட வேண்டும்.
11. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3 மற்றும் ஊராட்சி பகுதிக்கு 2 மீட்ட் அளவுள்ள திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்கத் திறந்தவெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத்தொழுவம், உந்து வண்டி நிறுத்தும் கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அமைக்கப்படலாம். ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நிறத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும், மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3.00மீட்டர் / 3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
12. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
13. கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன் படுத்தவோ, நிலச்சீரிசை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்தவோ கூடாது.

14. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 100 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.
15. மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய உள்ளாட்சி நிர்வாக அதிகாரியால் ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.
16. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த பட வேண்டும்.
17. பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் அங்கீகாரம் வழங்கும் முன் தானமாக ஒப்படைக்க வேண்டும். இதனை உள்ளாட்சி அமைப்பு தவறாது கடைப்பிடிக்க வேண்டும். இத்தகைய நிலங்களை மனைபிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தாலோ அல்லது விற்பனை செய்தாலோ அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பரிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
18. மனையின் ஊடே குறைந்த அழுத்த /உயர் அழுத்த கம்பிப்பாதை /தந்திக்கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
19. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக உள்ளாட்சி நிர்வாக அதிகாரியால் (Executive Authority) யுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான' செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும்.
20. (அ) மேற்படி மனைப்பிரிவிற்கு தனி அலுவலரால் நிர்வாக அனுமதி (Executive Authority) வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

    (ஆ). தமிழ்நாடு நகர்புற நில உச்சவரம்புச்சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால், மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

    (இ).மனைப்பிரிவு இடம் 1894 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4(1)-இன்படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா ? என்பது பற்றி பரிசீலனை செய்த பின்னரும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறை நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

    (ஈ) மேற்படி மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் அளிக்கப்படும்போது பொது திறவிடங்கள் சான்று இணைக்கப்பட வேண்டும்.

    உ) மேலும், மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப்பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதற்கான சான்று பெறப்படவேண்டும்.
21. மனுதாரர் உள்ளாட்சி நிர்வாகத்திடம் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெறப்பட்ட இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற திர்மான எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

22. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

23. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு நிர்வாக அனுமதியின் ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களால் இரத்து செய்யப்படும்.

24. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மற்றும் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

25. தொழில் நுட்ப அனுமதியில் பார்வை 10 இல் உள்ள நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவ்ரகளின் சுற்றறிக்கை ந.க.எண்.12201/2017/Spl.Cell, நாள்.28.09.2017-இன்படி The Tamil Nadu Government in G.O Ms. No. 112, Housing and Urban Development Dated. 22.06.2017 have approved the Tamil Nadu Rual Estate (Regulation and Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"

26. அரசாணை எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள். 04.05.2017-ல் கண்ட அரசாணையின்படி உரிய கட்டணம் கீழ்கண்ட அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட பார்வை 10 இல் காணும் இணை இயக்குநர், வேளாண்மைத் துறை அவர்களின் அறிக்கையில் இம்மனை அமையும் விவசாய நிலங்களை மாற்று உபயோகங்களுக்குப் பயன்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, இவ்வுத்தேசத்திற்கு நிர்வாக அதிகாரியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

0217-Urban Development
60- Other Urban Development Schemes
800- Other Receipts
AS-Receipts Under Land use Conversion Charges
27 Non. Taxation Fees -09 Collections.

(DPC-0217-60-800-AS-2790)

<u>**இறுதி ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடுகள் விவரம்**</u>

<u>பரப்பளவு</u>

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு : 1.13 அல்லது 4572.95 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 15 Nos.

15 மனைகளுக்கு உண்டான சாலை
(மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது).

S. கண்ணகி
தலைவர்
அணியார் ஊராட்சி

ஊராட்சி மன்ற தலைவர்
அணியார் ஊராட்சி
நாமக்கல் வட்டம்.



## our services doesn't just end there

### Buying & Selling Services
Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services
Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals
Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services
Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services
Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate